பக்கங்கள்:-23

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 14 | வெள்ளிக்கிழமை | 28.03.2025 | அதிர்வு 235 |
|---|---|---|---|---|---|

## சாமர சம்பத்துக்கு விளக்கமறியல்!



இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவினரால் நேற்று கைது செய்யப்பட்ட புதிய ஜனநாயக முன் னணியின்

07

# நால்வர் மீதான தடை மூலம் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் பிரித்தானியா

### ஒருபோதும் இடமளியோம் என்கிறார் வாசுதேவ



"இலங்கையின் முன்னாள் படைத் தளபதிகள் மூவர் உட்பட நால்வர் மீதான தடை மூலம் எமது நாட்டில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற செய்தியையே பிரித்தானியா வழங்கி இருக்கின்றது. எனினும், எமது நாட்டின் உள்ளக விடயங்களில் சர்வதேச சக்திகள் தலையிடுவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை."

– இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஜனநாயக இடதுசாரி

07

# ஜே.வி.பி.க்கு வாக்களித்து மீண்டும் வரலாற்றுத் தவறை இழைக்காதீர்கள்

### தமிழ் மக்களிடம் சுரேஷ் பகிரங்க வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

**"இன்று அதிக பலத்துடன் ஆளும் தரப்பாக ஜே.வி.பி. உள்ளது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அந்தக் கட்சிக்கு வாக்களித்து மீண்டும் வரலாற்றுத் தவறைத் தமிழ் மக்கள் இழைக்கக் கூடாது. ஆகையினால் இந்தச் சிங்கள தேசியக் கட்சிகளை விலக்கி வைத்துவிட்டு தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்."**

**- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

06




## பிரிட்டனின் செயலை அநுர அரசாங்கம் கண்டிக்காதது ஏன்?

### இப்படி விமல் கேள்வி



இலங்கையின் முன்னாள் படைத் தளபதிகள் மூவருக்கு

07

## கட்டளை பிறப்பித்த பென்சேகா மீது பிரிட்டன் ஏன் தடை விதிக்கவில்லை?

### தேசிய சுதந்திர முன்னணி கேள்வி

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குப் பிரித்தானியா தடை விதிக்காமல் இருப்பது சந்தேகத்துக்குரியது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று

07






உள்ளூராட்சித் தேர்தலில் பல கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து பல பத்து வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பல தரப்புகளும் தாங்கள் தாக்கல் செய்த வழக்குகள் இன்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன என்று தகவல் வெளியிட்டாலும், உண்மையில் இன்று உயர் நீதிமன்றத்தில் அந்த வழக்குகளில் ஒன்று மட்டுமே பட்டியலிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேச சபைக்கு ஜனநாயகத் தேசியக் கூட்டணியினால் (தபால் பெட்டிச் சின்னம்) கையளிக்கப்பட்ட வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து அக்கட்சியின் தேர்தல் முகவரும் கூட்டணிக் கட்சியான சிறி ரெலோவின் செயலாளருமான ப.உதயராஜா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவே இன்று நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

06

# பூநகரி,தெஹியத்தகண்டிய, மன்னார் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களும் மே 6 இலிலேயே நடக்கும் என நேற்று அறிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

தாமதமாக வேட்பு மனுத் தாக்கல் நடைபெற்ற பூநகரி, தெஹியத்தகண்டிய மற்றும் மன்னார் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களும் எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதியன்றே நடக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் ஏஎல்.ரத்னாயக்க அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் ஏலவே நீதிமன்ற செயற்பாடு காரணமாக விடுபட்டிருந்த தெஹியத்தகண்டிய மற்றும் மன்னார், பூநகரி ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனுத்தாக்கல் கடந்த 24, 25, 26, 27 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

ஏலவே வேட்புமனுக்கள் தாக்கல் முடிந்த அனைத்து சபைகளுக்கும், நீதிமன்ற செயற்பாடு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் நேற்று நிறைவடைந்த தெஹியத்தகண்டிய, மன்னார் மற்றும் பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும் ஏக காலத்தில் – அதாவது மே மாதம் 06ஆம் திகதி – நடைபெறவுள்ளது.

ஆனால், கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் நீதிமன்ற காரணங்களால் தற்போது நடைபெறமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.


தேர்தல் ஆணைக்குழு
Election Commission

MEDIA RELEASE

LAE/2025/27 2025.03.27

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025

பூநகரி பிரதேச சபை, மன்னார் பிரதேச சபை, தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை ஆகிய பிரதேச சபைகளின் வாக்கெடுப்பு திகதி பற்றி அறிவித்தல்

2025 மார்ச் மாதம் 10 ஆம் திகதி பெயர்குறித்த நியமனம் கோருவதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச சபை, மன்னார் மாவட்டத்தின் மன்னார் பிரதேச சபை, அம்பாறை மாவட்டத்தின் தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை ஆகிய உள்ளூர் அதிகார சபைகளுக்கான வாக்கெடுப்பு, 2025 மே மாதம் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)



# 18 சதவீத மாணவர்கள் மனஅழுத்தத்தால் பாதிப்பு

## விசேட வைத்தியர் தகவல்

நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களில் 18 சதவீத மானோர் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனவும் 22 சதவீதமானோர் தனிமைப்பட்டுள்ளனர் என்றும் ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளதாக சமூக சுகாதார விசேட வைத்தியர் சிரந்திகா விதான தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த 2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் 9.1 சதவீதமான பாடசாலை மாணவர்கள் தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாக உலகளாவிய பாடசாலை சுகாதார கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

தற்போது மாணவர்கள் மத்தியில் உளநலப்பிரச்சினைகள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. கடந்த 12 மாதங்களில் 22 சதவீதமானவர்கள் தனிமைப்பட்டுள்ளனர். 12 சதவீதமானவர்கள் பிரச்சினைகள் காரணமாக சில சந்தர்ப்பங்களில் தூக்கமின்மையால் அவதியுறுகின்றனர். 18 சதவீதமானவர்கள் மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 13 முதல் 17 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

7.5 சதவீதமானவர்களுக்கு நெருங்கிய நண்பர்கள் இல்லை என்பது பிரச்சினையாகக் காணப்படுகிறது. கையடக்க தொலைபேசி, சமூக ஊடக பாவனை, தனிமைப்படல் உள்ளிட்ட பல காரணங்களால் இந்த நிலைமை அதிகரித்துள்ளது.” – என்றார்.

# தலதா அத்துகோரளவை சந்தித்தார் ஜூலி சங்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவிற்கு விஜயம் மேற்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள உள்ளிட்ட குழுவினருடன் அவர் விசேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டுள்ளார்.

மேலும், அமெரிக்கத் தூதுவர் அங்குள்ள கட்சியின் தலைமையகத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டார்.

அவர் முன்னதாக தேசிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகங்களுக்குச் சென்றிருந்தார்.



## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்







# கிளிநொச்சியில் தமிழரசின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம்

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்களது அறிமுகக் கூட்டம் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி பிரதேச சபைகளில் தமிழரசுக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடும் 75 வேட்பாளர்களினதும் பங்கேற்போடு, நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், மாவட்டத்துக்கான தேர்தல் பிரசாரக் கட்டமைப்பை உருவாக்கி, முறைமைப்படுத்தப்பட்ட வகையில் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை செயலாளர் வீரவாகு விஜயகுமார், குறித்த மூன்று சபைகளினதும் மேனாள் தவிசாளர்களான அருணாசலம் வேழமாலிகிதன், சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், சுப்பிரமணியம் சுரேன் ஆகியோர் கருத்துரைகளையும் வேட்பாளர்களுக்கான வழிகாட்டுதல்களையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## திருமலை மாநகர சபை முதல்வர் தெரிவு என்று எதுவும் நடக்கவில்லை என்கின்றார் குகதாசன்

(ஏ.எச்.ஹஸ்பர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் திருகோணமலை மாநகர சபை முதல்வர், உப்புவெளிப் பிரதேச சபைத் தவிசாளர், வெருகல் பிரதேச சபைத் தவிசாளர் ஆகிய தெரிவுகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு விட்டன என முகநூலில் வெளிவரும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என இலங்கைத் தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.



திருகோணமலை குச்சவெளி பகுதியின் நாவற்சோலை கிராமத்தில் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:–

அப்படி எந்தவொரு முடிவுகளும் எடுக்கப் படவில்லை. முகநூலில் வெளி வந்ததாக நீங்கள் கூறுவதும் ஒரு போலியான செய்தியாகத்தான் இருக்க வேண்டும். எந்தவொரு சபையினுடைய தலைவரையும் தமிழரசுக் கட்சியோ அல்லது வேறு எந்தக் கட்சியோ தெரிவு செய்ய இயலாது. தேர்தல் முடிவடைந்த பின்பு அந்த சபையில் தெரிவு செய்யப் பட்ட மொத்த உறுப்பினர்களில் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களது ஆதரவைப் பெறுபவரே சபைத் தலைவராக உள்ளூராட்சி ஆணையாளரால் நியமிக்கப்படுவார் என பள்ளி மாணவர்களே அறிவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கின்றது. திருகோணமலை மாநகர சபை, பட்டினமும் சூழலும் பிரதேச சபை, வெருகல் பிரதேச சபை ஆகிய சபைகளில் ஆட்சியமைப்போம்.

மூதூர், குச்சவெளி ஆகிய பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பதில் செல்வாக்கு செலுத்துவோம். சேருவில, தம்பலகாமம், மொரவேவா, கிண்ணியா ஆகிய சபைகளில் தமிழர்கள் வாழும் வட்டாரங்களில் வெற்றி பெறுவோம். வெற்றிக்காக எவ்வாறான உத்திகளை கையாள உள்ளோம் என்பதனை வெளிப்படையாக கூற இயலாது.

தமிழரசுக் கட்சி அதிகார பரவாலக்கதிற்காகப் போராடுகின்ற ஒரு கட்சி. அந்த அடிப்படையில் உட்கட்சியிலும் அதிகார பரவலாக்கல் இருக்க வேண்டும் என்னும் நோக்கோடு, ஒவ்வொரு கோட்டத்திற்கும், தத்தம் உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் சுதந்திரம் வழங்கப்பட்டது. அந்த அடிப்படையில் வட்டாரம் மற்றும் கோட்டக் கிளையினர் தெரிவுகளை மேற்கொண்டனர்.

போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கபட்டு வருகின்றன.

என்னிடம் ஒரே ஒரு முகநூல் கணக்குதான் இருக்கின்றது ஆங்கில எழுத்துக்களில் கதிரவேலு சண்முகம் குகதாசன் என்னும் கணக்கு ஆகும். இதற்கு டிடரந வஉைம என அறியப்படும் நீலச் சரி குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வேறு எந்தக் கணக்குகளும் இல்லை. அப்படி இருந்தால் அவை போலியான கணக்குகள் ஆகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மகளிர் மற்றும் இளையோர் உரிய விகிதத்தில் இல்லாமல் இருந்திருந்தால் தேர்தல் திணைக்களம் வேட்புமனுவை நிராகரித்து இருக்கும். திருகோணமலை மாவட்டத்தில் நாங்கள் வேட்புமனு தாக்கல் செய்த 9 சபைகளது வேட்பு மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தன. இதிலிருந்தே நாங்கள் சரியான முறையில் மகளிர் மற்றும் இளையோரைத் தெரிவு செய்து இருக்கின்றோம் என நீங்கள் அறிந்து கொள்ளலாம். – என மேலும் தெரிவித்தார்.

## சாவகச்சேரியில் சங்கு அணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று







(பிரபாகரன் டிலக்சன்)

சங்குச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சாவகச்சேரி பிரதேச சபை வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்றைய தினம் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளரும், தற்போதைய வேட்பாளருமாகிய செ.மயூரன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத்தலைவர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபையின் வேட்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# பிரிட்டனின் தடைவிதிப்பு அரசியல் நாடகமாம்!

## இப்படி விளக்கம் கூறுகிறார் கருணா அம்மான்





(கனகராசா சரவணன்)

'கிழக்கு தமிழ் கூட்டமைப்பு' உருவாக்கப்பட்டதையடுத்து எனக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தடைவித்தமை அரசியலுக்கான ஒரு நாடகம். ஆகவே கிழக்கு மாகாணசபையைத் தவற விடுவோமாக இருந்தால் முஸ்லிம் தலைவர்களுடைய ஆதிக்கம் வளர்ச்சியடைந்து, தமிழர்களுடைய நிலப் பிரதேசங்கள் அபரிக்கப்பட்டு, இருப்பே கேள்விக்குறியாகும். எனவே முதலில் தோற்கடிக்க வேண்டியவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என முன்னாள் பிரதி அமைச்சரான கருணா என்றழைக்கப்படும் வி.முரளீதரன் தெரிவித்தார்.

கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் கல்குடா தொகுதிக்கான வேட்பாளர் அறிமுக விழா கிரான் றெஜி மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே கருணா இவ்வாறு தெரிவித்தார்.

இந்த தேர்தல் ஒரு முக்கியமான தேர்தலாக பார்க்கின்றோம். முக்கியமாக, முதல் முறையாக, ஓர் அணியாக திரண்டு ஒரு கூட்டாகக் களமிறங்கியுள்ளோம். ஆகவே, ஒவ்வொரு வேட்பாளரும் வெல்லவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

தற்பேர்து கிழக்கு தமிழ் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பிற்பாடு இதனை பெறுத்துக் கொள்ள முடியாத பலர் கலக்கமடைந்துள்ளனர். இவ்வளவு காலமும் இல்லாத எதிர்ப்பு உருவாகி கொதித்துக் கொள்கின்றனர். மட்டக்களப்பு தமிழில் சுங்கானில் கொதிக்கின்ற மாதிரி கொதிக்கின்றனர்.

இதைபற்றி புலம்பெயர்ந்து வாழுகின்ற படித்தவர்கள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் சிந்திப்பதில்லை. அங்கு றோட்டு கூட்டித் திரிகின்றவர்கள், மலசல கூடம் கழுவுபர்கள் தான் கத்துவது. அவர்கள் தான் கொதிக்கின்றனர். அடுத்தது தமிழ் தேசிய கூட்டமைப்பு. அவர்களுடைய தோல்விக்கான அத்திவாரத்தை போட்டுள்ளோம். எனவே அவர்களை முதலில் தோற்கடிக்க வேண்டும்.

அவர்கள் போலி தேசியத்தை பேசிக்கொண்டு, தேசியம், தேசியம் எனஜ் கூறி மக்களை ஏமாற்றி, இடைப்பட்ட லஞ்சம், ஊழல் எல்லாவற்றையும் செய்துகொண்டு, இன்று தமிழ் தேசியம் எனச் சொல்லுகின்றனர். நடிகர் வடிவேலுவன் கிணற்றைக் காணவில்லை என்ற பகிடி மாதிரி அண்மையில் களுவாஞ்சிக்குடி எருவில் பிரதேசத்தில் விளையாட்டு மைதானத்தை காணவில்லை. என்ற விவகாரம் வந்தது இவர்களுடைய வண்டவாளங்கள் வரும். எனவே இதை புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

உண்மையில்போராளிகளாகஇருந்தவர்கள், மாவீரர் குடும்பங்களாக இருந்து வந்தவர்கள்தான் எங்கள் மக்களை ஆளவேண்டும். அவர்களுக்குதான் இந்த உரிமையும் மக்களை நடாத்தும் திறமையும் இருக்கின்றது.

நாங்கள் இப்போது கூட்டமைப்பை உருவாக்கியது உலகம் முழுக்க பேசும் பொருளாக பார்க்கப்படுகின்றது. அண்மையில் பிரித்தானியா அரசாங்கம் கருணா அம்மானாகிய எனக்கு தடைவிதித்தது. நாங்கள் என்ன பிச்சையா எடுக்கப்போறோமா? இவ்வளவு நாளும் இல்லாத தடை கூட்டுச் சேர்ந்ததும் தடைவிதிக்கின்றனர். இது ஒரு அரசியலுக்கான நாடகம்தான்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தில் நான் 2006 இல் கைது செய்யப்பட்டு அங்கு சிறைச்சாலையில் 8 மாதங்கள் இருந்தேன். அப்போது 8 மாதம் இருந்த போது கண்டுபிடிக்காத குற்றைச்சாட்டை இப்போது தான் பிரிட்டன் அரசாங்கம் கண்டுபிடித்துள்ளது. எப்படியான ஒரு மொக்கு அரசாங்கம். அந்தநேரம் கண்டுபிடித்து கையில் விலங்கை போட்டுக் கொண்டு சென்றிருக்கலாம்.

ஆனால் அரச மரியாதையடன் கட்டுநாயக்கா விமான நிலையம்வரை என்னை பாதுகாப்புடன் கொண்டுவந்தார்கள். அப்படிபட்ட பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இப்பதான் விளங்கியிருக்கு கருணா அம்மான் பிழை விட்டுள்ளார் என. ஆகவே இது எல்லாம் கிழக்கு தமிழர்களுடைய இருப்பை சூறையாடுவதற்கான நடவடிக்கை. இதற்காக புலம்பெயர்ந்து வாழுகின்ற சில அருவருடிகள் ஒத்துழைத்துவருகின்றனர்.

காய்கின்ற மரத்துக்குக் கல்லெறி விழும் என்ற பழமொழிக்கமைய காய்க்கின்ற எங்களுக்கு எறிவிழுகின்றது. எனவே வெற்றிக் குறி தென்படுகின்றதுடன் கிழக்கு மாகாணசபையை நாங்கள் கைப்பற்றுவோம். இந்தக் கிழக்கு மாகாணசபையை தவற விடுவோமாக இருந்தால் முஸ்லிம் தலைவர்களுடைய ஆதிக்கம் வளர்ச்சியடைந்து தமிழர்களுடைய நிலப் பிரதேசங்கள் குட்டிச்சுவராக்கி இருப்பே கேள்விக்குறியாகும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் கல்முனை மாநகரசபையைச் சேர்ந்து ஆட்சி அமைக்கின்றதற்கு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர். இதேபோல கடந்த காலத்தில் மட்டக்களப்பில் 8 இடத்தை பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்/க்கு முதலமைச்சர் பதவியை கொடுத்தவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு. இவர்கள்தான் இப்போது தேசியம் கதைக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 70 வீதமான மக்கள் எங்களுக்கு ஆதரவு தந்துள்ளனர். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது தமிழ் தேசிய கூட்டமைப்பு வாய்க்கு வந்தமாதிரி கதைப்பது – அதாவது எல்லா நாம்பன் மாடும் வாலை கிளப்பி ஓடுதென்று பசுவும் வாலைக் கிளப்பி ஓடியது என்ற பழமொழி போல தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு முதலில் யார் என்று தெரியாத் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் வாலைக் கிளப்புகின்றார். இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது நான்தான். அந்த காலத்தில் அவர் எங்கிருந்தார் என்று தெரியாது. ஆகவே நாங்கள் வெல்லப் போவது உறுதி. – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆயினும், ஏனைய பல மனுக்களும் இதே விடயத்திற்கான – தேர்தல் வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிரான – வழக்குகள் என்பதால் சிறி ரெலோ தரப்பின் வழக்கு இன்று எடுத்துக் கொள்ளப்படும் போது, தாங்களும் நீதிமன்றில் ஆஜராகி, தங்கள் மனுக்களும் அதே விடயத்திற்கானதுதான் என்று குறிப்பிட்டு, அவற்றையும் மன்றில் எடுத்துக் கொள்ள வைக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றனர்.

அப்படி ஒரே விடயத்திற்கான மனுக்களை ஒன்றாகப் பரிசீலனைக்கு எடுப்பது உயர்நீதிமன்றத்தில் வழமை என்பதால், அதனை எதிர்பார்த்தே தங்கள் வழக்கும் இன்று பட்டியலிடப்பட்டுள்ளன என சில தரப்புகள் கூறுகின்றன. உண்மையில் சிறி ரெலோ தரப்பில் வழக்கு மட்டுமே இன்று இதுவரை நீதிமன்றில் எடுக்க பட்டியலிடப்பட்டுள்ளது. அது எடுக்கப்படும் போது, ஏனைய இதுபோன்ற வழக்குகளைச் சேர்ந்த மனுதாரர்களின் சட்டத்தரணிகளும் நீதிமன்றில் பிரசன்னமாகி தங்களின் மனுக்களையும் எடுத்துக் கொள்ளும்படி உயர்நீதிமன்றைக் கோருவார்கள் எனத் தெரிகின்றது.

இந்த மனுக்களை எப்படிக் கையாள போகின்றது என்பது தொடர்பான உயர்நீதிமன்றத்தின் பிரதிபலிப்பை இன்று எதிர்பார்க்கலாம்.

+ + +

பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து உயர்நீதிமன்ற உத்தரவுக்கு அமைய பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கும் தேசபந்து தென்னக்கோனை, நிரந்தரமாக அப்பதவியில் இருந்து வெளியேறுவதற்கான பிரேரணை ஒன்று அரசு தரப்பினால் நாடாளுமன்ற சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. ஏப்ரல் 9, 10ஆம் திகதிகளில் அது நாடாளுமன்றில் எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிகின்றது.

அத்தகைய பிரேரணையொன்று எவ்வாறு கையாளப்படும் என்பது தொடர்பில் நேற்று 'மாலை முரசு' ஆசிரியர் தலையங்கத்தில் விடயம் விரிவாக விவரிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் கொழும்பிலிருந்து சட்டவாளர் ஒருவர் என்னுடன் பேசினார்.

"உங்கள் ஆசிரியர் தலையங்கத்தில் விளங்கப்படுத்திய மாதிரி 'அதிகாரிகளை பதவி நீக்கும் (நடைமுறைகள்) சட்டம்' என்று பெயரிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் ஐந்தாம் இலக்கச் சட்டத்தின் மூலம் தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வதாயின் அது தொடர்பில் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு விசாரணை நடத்தி, அந்த விசாரணையின் தீர்ப்பின் அடிப்படையிலேயே விடயத்தை முன்நகர்த்த முடியும். அப்படி விசாரணை நடத்தி விவகாரத்தை முன்னெடுப்பதாயின் நீண்ட காலம் பிடிக்கும்." – என்றால் அந்தச் சட்டவாளர்.

நான் சிரித்தேன்.

"ஆம். ஐயா!அது நாடாளுமன்றில் நீண்ட நடவடிக்கையாகத் தோன்றினாலும், ஆளும் தரப்பு நினைத்தால் அதைத் தன்னிடம் உள்ள பெரும்பான்மையை வைத்து சில மணி நேரங்களில் கூட பூர்த்தி செய்ய முடியும். பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்காவைப் பதவி விலக்குவதற்கு ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணை 24 மணி நேரத்துக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டமையை மறந்துவிடாதீர்கள். அப்படி நாடாளுமன்ற நடைமுறைகளை மோசமாக – கொச்சைத்தனமாக – பிற்போக்குத்தனமாக – முன்னெடுத்த அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி பீடத்தை, இன்று அதிகாரத்தில் இருக்கும் ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தி கடுமையாக எதிர்த்திருந்தது. ஆயினும் அதே தேசிய மக்கள் சக்தி மஹிந்த காலத்தின் அதே அராஜகப் போக்கை தேசபந்து தென்னக்கோன் விடயத்திலும் கையாள மாட்டாது என்று கூறுவதற்கு இல்லை. நினைத்தால் இரண்டு நாள்களுக்குள்ளும் விசாரணை முடிவுற்றதாக அறிவித்து, தேசபந்து தென்னக்கோனை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையை தேசிய மக்கள் சக்தி ஓரிரு வாரத்துக்குள் பூர்த்தி செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை" – என்றேன்.

என் கருத்தைப் புரிந்து கொண்ட அந்தச் சட்டவாளர் "இவங்களும் அப்படிச் செய்தாலும் செய்வார்கள்" என்று கூறி தன் சந்தேகத்தை வெளிப்படுத்தினார்.

அதிகாரம் கைக்கு வந்து விட்டால் எல்லா தரப்புக்களும் பெரும்பாலும் ஒரே மாதிரித்தான் நடக்கும் என்பது தவிர்க்க முடியாத நியதிதான்.

## ஜே.வி.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மிகவும் முக்கியமான தேர்தலாகப் பார்க்கப்படுகின்றது. அத்தகைய முக்கியத்தும் உள்ள இந்தத் தேர்தலை வெறுமனே உள்ளூராட்சி சபைத் தேர்தல் எனக் குறைத்து மதிப்பிட கூடாது.

இந்தச் சபைகள் அனைத்தையும் கைப்பற்ற ஆளுங்கட்சியினர் முழு வேலையையும் செய்வார்கள். ஏனெனில், அவர்கள் வசம் நிதிப் பலம், ஆட் பலம், முப்படைப் பலம் என சகலதையும் பயன்படுத்து ஆட்சியைப் பிடிப்பதற்கு பல்வேறு முயற்சிகளையும் செய்வார்கள்.

இதற்கு மேலாக வேட்பாளர்கள் மட்டுமல்லாது கட்சிகளுக்கு எதிராகவும் இல்லாத பொல்லாத பல பிரச்சாரங்களை அவர்கள் செய்யக் கூடும். ஆகையினால் இவற்றையெல்லாம் உணர்ந்தவர்களாக முழு வீச்சுடன் உங்களது பிரச்சாரங்களை மேற்கொண்டு வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தலில் சில சபைகளில் எங்களது வேட்புமனுக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதற்கு எதிராக நாங்கள் உயர்நீதிமன்றத்துக்குச் சென்று வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறோம். இன்னும் சில தினங்களில் சாதகமான தீர்ப்பு வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறான தீர்ப்பு வந்த பின்னர் சகல இடங்களிலும் நாம் எமது பிரச்சார நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்போம். இதனூடாக எங்களது சங்கு கூட்டணியைப் பலப்படுத்தி வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதில் தவறிழைக்கக் கூடாது.

குறிப்பாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மாற்றம் வேண்டும் என்று ஒரு பகுதியினர் விரும்பி வாக்களித்தனர். அதனூடாக முகம் தெரியாத மூன்று பேரைக் கொண்டு வந்தார்கள். அவர்களை நாடாளுமன்றமும் அனுப்பி வைத்தார்கள்.

அவ்வாறு திசைகாட்டியில் வென்ற மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை யாராவது பார்த்து இருக்கிறீர்களா என்றால் இல்லை. இப்படி முகம் தெரியாதவர்களையே வாக்களித்து அனுப்பியிருக்கின்ற நிலையில் தங்களுக்கு மக்கள் ஆதரவு பலம் இருப்பதாக அவர்கள் நம்புகின்றனர்.

அப்படியான மனோநிலையில் மக்கள் இல்லை என்பதை அவர்களுக்கு இந்தத் தேர்தலின் ஊடாகத் தெரியப் படுத்த வேண்டும்.

அப்படியாக இந்த அரச தரப்பினர் மீண்டும் ஒரு தடவை வெல்வார்களாக இருந்தால் தமிழ் மக்களின் இத்தனை அழிவுகள், போராட்டங்கள், தியாகங்கள் எல்லாம் வீணாகிப் போன சூழ்நிலையை ஏற்படுத்தும் நிலைமை ஏற்படலாம்.

ஆகவே, அரச தரப்பில் இருந்து அல்லது சிங்கள தரப்பில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்யக் கூடாது என்பதில் தெளிவாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும். இந்த ஆட்சியாளர்களின் ஏமாற்று வித்தைகளுக்கு இடமளிக்காது அவர்களுக்கு நல்லதொரு பாடத்தைப் புகட்டும் வகையில் உங்களது செயற்பாடுகள் அமைய வேண்டும்.

இந்த ஆளுந்தரப்பினருக்கு எதிராகவே நீங்கள் முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டியதாக உள்ளது. கடந்த தேர்தல் போன்று இதிலும் தவறிழைத்தால் அது ஒட்டுமொத்த தமிழினத்துக்கே பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்து உள்ளது.

இன்றைக்கு அதிக பலத்துடன் ஆளும் தரப்பாக ஜே.வி.பி. உள்ளது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அந்தக் கட்சிக்கு வாக்களித்து மீண்டும் வரலாற்றுத் தவறைத் தமிழ் மக்கள் இழைக்கக் கூடாது. ஆகையினால், இந்தச் சிங்கள தேசிய கட்சிகளை விலக்கி வைத்துவிட்டு தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்.

மேலும் சுயேச்சையாகவும் ஒரு எம்.பி. வந்திருக்கின்றார். அவர் யார் என்பதும் இப்போது அவர் என்ன என்ன செய்து வருகின்றார் என்பதும் எல்லோருக்கும் தெரியும். குறிப்பாகச் சொல்வதானால்

தமிழ் மக்களின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையில்தான் இந்த வைத்தியரின் நடவடிக்கைகள் இருக்கின்றன.

இதேவேளை, இந்தத் தேர்தலில் யாரும் வெல்ல முடியாது என்றும், தேர்தல் முடிந்த பின்னர் கூட்டுக்களை அமைக்கலாம் என்றவாறாக சுமந்திரன் கூறுவார். ஆனால், சபைகளில் நாங்கள் பெரும்பான்மையை எடுக்க வேண்டும். இதனூடாக கூட்டுச் சேராமலும் ஆட்சியமைக்க முடியும். கூட்டுச் சேர்ந்தால் தான் ஆட்சி அமைக்கலாம் என்றில்லை.

அதேநேரத்தில் யாருடன் கூட்டு என்று பலர் கேட்கலாம். உண்மையில் மக்களின் முழுமையான ஆதரவுடன் நாங்கள் வெல்வோமாக இருந்தால் யாருடனும் கூட்டுச் சேர வேண்டிய தேவை கிடையாது. எனவே, கடந்த தேர்தலில் இழைத்த தவறுகளை மறுபடியும் இழைக்காமல் தமிழ் மக்களின் போராட்டங்களும், தியாகங்களும் வீண்போகாத வகையில் சிந்தித்துச் செயற்பட வேண்டும்." – என்றார்.

## அநுர அரசாங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிராகப் பிரிட்டனால் விதிக்கப்பட்டுள்ள தடைகளுக்கு எதிராக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

போலியான குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே பிரிட்டனால் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும், வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் பிரிட்டனின் இந்த நடவடிக்கை கண்டிக்கப்படவில்லை என்றும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

## நால்வர் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னணி கட்சி காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டில் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சிவில் யுத்தத்துக்குத் தலைமை தாங்கிய 3 படைத் தளபதிகளுக்குப் பிரித்தானியா தடை விதித்திருக்கின்றது. இது சர்வதேசம் தொடர்பான பிரித்தானியாவின் இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகின்றது.

ஏனெனில் காசாவில் இஸ்ரேல் இராணுவம் அங்கு பாரிய இனப்படுகொலைகளை மேற்கொள்ள அமெரிக்கா உதவி வருகின்றபோது, அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல், பிரித்தானியா பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்துக்குத் தலைமை தாக்கியமைக்காக எமது படைத் தளபதிக்குப் தடை விதித்திருக்கின்றது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பிரேரணை கொண்டு வந்தபோது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ், மைத்திரிபால சிறிசேன அதற்கு இடமளிக்காமல், உள்ளகப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதாகத் தெரிவித்திருந்தனர்.

அந்தப் பிரேரணை தற்போதும் செல்லுபடியானதாக இருக்கின்றது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் அந்த முயற்சியிலேயே இருந்து வருகின்றன.

எமது நாட்டின் உள்ளக விடயங்களில் சர்வதேச சக்திகள் தலையிடுவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

அதனால் எமது நாட்டின் கௌரவத்தை அரசு மதிப்பதாக இருந்தால், பிரித்தானியாவின் இந்தத் தடை விதிப்பை வன்மையாகக் கண்டிக்க வேண்டும்." – என்றார்.

## சாமர சம்பத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க எதிர்வரும் ஏப்ரல் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதான அவர் கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டார்.

இதன்போது இரண்டு குற்றச்சாட்டுக்களுக்காக அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

எனினும், மற்றுமொரு குற்றச்சாட்டுக்காக அவரை ஏப்ரல் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## கட்டளை பிறப்பித்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

"யுத்த காலத்தில் பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித படுகொலைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி முன்னாள் பாதுகாப்பு பிரதானிகளான சவேந்திர சில்வா, வசந்த கரன்னாகொட மற்றும் ஜகத் ஜயசூரிய ஆகியோருக்கு எதிராகப் பிரித்தானியா தடை விதித்துள்ளது.

அதேபோல் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய கருணா அம்மானுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பதவி வகித்தார். அவரது கட்டளைகளையே சவேந்திர சில்வா, ஜகத் ஜயசூரிய ஆகியோர் பதவி நிலை அதிகாரிகள் என்ற அடிப்படையில் செயற்படுத்தினார்கள். அவ்வாறாயின் ஏன் சரத் பொன்சேகாவுக்குப் பிரித்தானியா தடை விதிக்கவில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பினர் கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்வதை அப்போதைய கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவே தடுத்தார்.

1815 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் மனிதப் படுகொலைகளை படுமோசமாக நடத்தி, காடுகளை அழித்து பல்லாயிரக்கணக்கான யானைகளைக் கொன்று, தந்தங்களையும், பெறுமதியான சொத்துக்களையும் கடத்திச் சென்ற பெரிய பிரித்தானியா இன்று மனித உரிமைகள் குறித்து இலங்கைக்குப் பாடம் கற்பிக்கின்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் கொள்கைவாதிகளில் பெருமளவிலானோர் பிரித்தானியாவில் வாழ்கின்றார்கள். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே பிரித்தானியா தற்போது இந்தத் தடையை விதித்துள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பின் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் இன்றும் நாட்டில் உள்ளார்கள்.

பிரித்தானியாவில் தற்போதைய முறையற்ற செயற்பாடு அழிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்புக்கு உயிர்ப்பிக்கும் வகையில் உள்ளது. ஏனெனில் கடந்த காலங்களில் நாட்டில் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய தரப்பினர் தேசியத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். நினைவேந்தல் பகிரங்கமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. பாதுகாப்புத் தரப்பு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது." – என்றார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கோட்டை விடும் வாய்ப்பு

கிடைத்த வாய்ப்பை வசமாகப் பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கி கொள்வதும்தான் அரசியல். சாணக்கிய அரசியல் தந்திரம் என்பது அதுதான்.

கிட்டிய வாய்ப்பை நீடித்த அரசியல் வெற்றியாக - நிலையானஒன்றாக - மாற்றுவதில்தான் அரசியலில் நிரந்தரம் தங்கியுள்ளது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பாலான அரசியல்தரப்புக்கள் வாய்ப்புக்களை - சந்தர்ப்பங்களை - கோட்டை விடுகின்ற போக்குடையனவாகவே தெரிகின்றன.

தமிழர்களின் அரசியலிலும் சரி, தென்னிலங்கையின் அரசியலிலும் சரி, அதுதான் செல்நெறியாக உள்ளது.

தனக்கான நீதியான தீர்வு கிட்டாமல் கடந்த ஏழரை தசாப்தங்களாக - முக்கால் நூற்றாண்டாக - போராடி வரும் தமிழினம் காலத்துக்குக் காலம் கிடைத்த வாய்ப்புகளைப் பல சந்தர்ப்பங்களிலும் கோட்டை விட்டமை வெளிப்படையானது.

அதே நிலைமைதான் தென்னிலங்கை அரசியல் தரப்புகளிலும்.

2009 மே மாதத்தில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைத் தன்னுடைய கொடூரமான - குரூரமான - மோசமான - யுத்த நடவடிக்கைகள் மூலம் முறியடித்த மஹிந்த ராஜபக்ஷ, அந்தச் சமயத்தில் இந்த நாட்டுக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய - நீதி, நியாயமான - நிரந்தரமான - தீர்வு ஒன்றை வழங்கத் தக்க வாய்ப்பு கிட்டியவராக இருந்தார். வரலாறு அந்த அற்புதமான வாய்ப்பை அவருக்குத் தந்திருந்தது.

ஆனால் தம்மை ஓர் உலகம் போற்றும் உத்தமராக - நாட்டுத் தலைவராக - மாற்றுவதற்குக் கிட்டிய அந்தச் சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டு விட்டு, அவர் இன்னொரு துட்டகைமுனு போல தெற்குக்குத் தன்னை முன்னிலைப்படுத்த முயன்று, அதிலும் தோற்றுப் போய் இருக்கின்றார்.

மீண்டும் அவரது மொட்டுக் கட்சிக்கு 2018 உள்ளூராட்சி தேர்தல், 2020 ஜனாதிபதித் தேர்தல், 2021 பொதுத் தேர்தல் ஆகியவற்றில் மக்கள் உயரிய சந்தர்ப்பத்தை அளித்தார்கள். அதனையும் ராஜபக்ஷ தரப்பினர் போட்டடித்துக் குழப்பி விட்டார்கள்.

இப்போது, 2024 இல் ஜனாதிபதி தேர்தலிலும், பின்னர் பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்திக்கு பெருவெற்றியை வழங்கி மற்றொரு வாய்ப்பை - சாதகமான சந்தர்ப்பத்தை - இலங்கை மக்கள் தந்திருக்கிறார்கள்.

கிடைத்த சந்தர்ப்பத்தை - அரிய வாய்ப்பை - உரிய முறையில் பயன்படுத்துவதுதான் அரசியல் என்ற அடிப்படை புரியாத தேசிய மக்கள் சக்தியும், முன்னைய தேசத்தலைவர்கள் போல தானும் இந்த வாய்ப்பைக் கோட்டை விட்டே தீருவேன் என்ற பாணியில் கங்கணம் கட்டி செயல்படுவதாகத் தெரிகிறது.

மூன்றில் இரண்டுக்கும் அதிகமான நாடாளுமன்றப் பெரும்பான்மை என்ற அளப்பரிய வெற்றியை மக்கள் தந்திருக்கின்ற போது அதைப் பயன்படுத்தி, நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கும் ஏனைய விவகாரங்களுக்கும் தீர்வு காண வேண்டிய தேசிய மக்கள் சக்தி, அந்த விடயங்களை உரிய முறையில் கையாள்வதை விட்டுச் சொதப்பிக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தப் போக்கில் தேசிய மக்கள் சக்தி தொடர்ந்தும் பயணிக்குமேயானால், முன்னைய தலைவர்கள் அரியவாய்ப்பைக்கோட்டைவிட்டு, நாட்டையே நட்டாற்றில் கைவிட்டமை போன்று, தேசிய மக்கள் சக்தியும் அல்லாட போகின்றது என்றே தோன்றுகின்றது.



# தலதா மாளிகை யாத்திரைக்காகத் தனிப்பட்ட வகையில் நிதியளித்து ஏமாற வேண்டாம்: ஆனந்த தேரர் வலியுறுத்து

ஸ்ரீதலதா மாளிகை யாத்திரைக்காக மோசடியான வகையில் நிதி திரட்டும் நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அஸ்கிரிய மகா விகாரையின் பிரதி பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

ஸ்ரீதலதா மாளிகை யாத்திரைக்கான நடவடிக்கை மற்றும் செயற்பாடுகள் அரசாங்கத்தினால் கண்டி மாநகர சபை மற்றும் ஸ்ரீதலதாமாளிகைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர, வேறு எந்த தரப்பினருக்கும் அது தொடர்பான பொறுப்பு கையளிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீதலதா மாளிகை யாத்திரை அடுத்த மாதம் 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தநிலையில், தலதா மாளிகை யாத்திரைக்கு நிதி திரட்டுவதற்குப் பங்களிக்குமாறு ஒரு குறிப்பிட்ட தரப்பினரால் சமூக ஊடகங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும், இந்த பிரசாரமானது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என ஸ்ரீதலதாமாளிகை தெரிவித்துள்ளது.

தலதா மாளிகை யாத்திரைக்காகத் தனிப்பட்ட ரீதியில் எந்தவொரு நபரும் நிதியளிக்க வேண்டாம். அவ்வாறான செயற்பாடுகள் இங்கு இடம்பெற முடியாது.

ஆகவே, தனிப்பட்ட ரீதியில் நிதியளித்து ஏமாற வேண்டாம் என அஸ்கிரிய மகா விகாரையின் பிரதி பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.

# அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் இறக்குமதி செய்ய நடவடிக்கை

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

பண்டிகை காலத்தில் அரிசியை இறக்குமதி செய்தாவது நாட்டினுள் அரிசி தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என வர்த்தக மற்றும் வணிக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் தற்போது நெல்லுக்கான தட்டுப்பாடு இல்லை. எனவே, எவ்வாறு அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படும்.

விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் நெல்லுக்கான நிர்ணய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதனை மீறிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அரசாங்கம் என்ற வகையில் அரிசியை இறக்குமதி செய்யவும் தயாராகவிருக்கிறோம்.” என்றார்.













# ஜனாதிபதி உழைக்கும் மக்களை மறந்து செயல்படுகின்றார்: சஜித்

பாட்டாளி வர்க்கத்தினரை பிரதிநிதித்துவப்படுத்திய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியான பின்னர் தொழிலாளர் வர்க்கத்தை மறந்து செயல்பட்டு வருகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்க்கட்சியில் இருந்த அநுரகுமார திஸாநாயக்கவிற்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் உள்ள வித்தியாசம் தற்போது தெளிவாகத் தெரிகிறது.

எதிர்க்கட்சியில் இருந்த அநுர குமார திஸாநாயக்க உழைக்கும் மக்களுக்காகவும், பொது மக்களுக்காகவும் குரல் எழுப்பினார்.

ஆனால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வறிய மக்கள், உழைக்கும் மக்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்களை மறந்து செயல்பட்டு வருகிறார்.

நாட்டு மக்கள் படும் துன்பங்கள், வலிகள், அடக்குமுறைகள் மற்றும் அசௌகரியங்கள் குறித்து ஜனாதிபதிக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ எந்த புரிதலும் இல்லை.

மக்கள் படும் துன்பங்களை உணராது செயற்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வரிச்சுமைகளை நீக்கி எரிபொருள்களை மக்களுக்கு சலுகை விலையில் தருவதாகச் சொன்னார்கள்.

ஆனால் இன்று வரை இதைச் செய்ய முடியாது போயுள்ளது.

பொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பிலும் அரசாங்கத்தினால் எதனையும் செய்ய முடியாது போயுள்ளது"– என்றார்.















# சோடாவிற்குள் மண்ணெண்ணை; புதுக்குடியிருப்பில் முறைப்பாடு

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதி விற்பனை நிலையம் ஒன்றில் நபர் ஒருவர் சோடவினை கொள்வனவு செய்த போது சோடாவிற்குள் மண்ணெண்ணை மணம் இருப்பதாக முறைப்பாடு வழங்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு பதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் இருந்து நபர் ஒருவர் வீட்டு வேலையாட்களுக்காக சோடா ஒன்றினை கொள்வனவு செய்துள்ளார்.

சோடாவினை கொள்வனவு செய்த அந்த நபரின் வீட்டு வேலையாட்கள் சோடாவினை குடித்தபோது சோடாவில் இருந்து மண்ணெண்ணை மணம் வந்துள்ளது. அதனையடுத்து புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவை பணிமனைக்கு அந்த நபர் சோடாவுடன் நேரில் சென்று முறைப்பாடு வழங்கியிருந்தார்.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவை பணிமனை பரிசோதகர்கள் மேற்படி விற்பனை நிலையத்தினை சோதனை செய்து கலப்படம் இருப்பதாக சந்தேகிக்கப்படும் சோடாவினை கைப்பற்றியுள்ளனர்.

மண்ணெண்ணை கலக்கப்பட்டு இருக்கின்றது என சந்தேகிக்கப்படும் சோடாவின் மாதிரி பரிசோதனைக்கு அனுப்பப்படவுள்ளது. அத்தோடு சோடாவினை விற்பனை செய்த விற்பனையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து அதே பகுதியில் உள்ள ஏனைய விற்பனை நிலையங்களிலும் சுகாதார பரிசோதகர்களால் சோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.


















# கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

(பா.சதீசன்)

கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்த கலந்துரையாடலில் மாடுகளுக்கான தோடு குற்றுதல், கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தல், மேய்ச்சல் தரை இன்மை, கால்நடை மருத்துவம், கால்நடைகளால் ஏற்படும் விபத்துக்களை கட்டுப்படுத்தல், கால்நடைகள் களவாடப் படுதலை இல்லாதொழித்தல், புதிய இன மாடுகளை அறிமுகப் படுத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு சில தீர்வுகளும் வழங்கப்பட்டிருந்தது.

அத்தோடு கட்டாக்காலி மாடுகள் வீதியில் நிற்குமிடத்து 10,000 ரூபா தண்டப்பணமும் அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.விஜயகுமார் தலைமையில் ஆரம்பமாகிய குறித்த கலந்துரையாடலில் புதுக்குடியிருப்பு உதவி பிரதேச செயலாளர் கி.டென்சியா, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஜெயந்தன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு அரச கால்நடை வைத்தியர் எஸ்.நிகேதினி, கமநல சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், கால்நடை கூட்டுறவு சங்கத்தினர், கால்நடை வளர்ப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.







# இல்மனைட் அகழ்விற்கு அனுமதியளிப்பதில்லை முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுவில் முடிவு!

## ரவிகரன் எம்.பியின் எதிர்ப்பால் இந்தத் தீர்மானம்

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – கொக்கிளாய் தொடக்கம், செம்மலைவரை "மிஸ் வெஸ்ட் ஹெவி சாண்ட் பிறைவேட் லிமிட்டெட்" நிறுவனம் இல்மனைட் அகழ்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி கோரியிருந்த நிலையில், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் கடுமையான எதிர்ப்பையடுத்து இல்மனைட் அகழ்வதற்கு அனுமதி வழங்குவதில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஏற்கனவே கொக்கிளாயில் இல்மனைட் அகழப்பட்ட இடங்களும் குறித்த நிறுவனத்தால் சீர்செய்யப்படவேண்டுமெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இல்மனைட் அகழ்வதற்கு அனுமதி வழங்கமுடியாது. கொக்கிளாய் முகத்



துவாரத்தில் ஏற்கனவே மக்களுக்குரிய 44ஏக்கர் காணியில், மக்களின் அனுமதி பெறப்படாமல் இல்மனைட் அகழ்வு செய்யப்பட்டதால் அந்த இடங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அப்பகுதியில் இல்மனைட் அகழ்ந்தால், கடல் நீர் உட்புகும், கடற்றொழில் பாதிக்கப்படும், கரவலைத் தொழில் பாதிக்கப்படுமென அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு ஏற்கனவே அந்த மக்களால் தெரிவிக்கப்பட்டதைப்போலவே தற்போது அங்கு மிகமோசமான பாதிப்பு நிலைமைகள் காணப்படுகின்றன.

இந் நிலையில் முல்லைத்தீவு கரையோரப் பகுதிகளை அழிவுறச் செய்கின்ற நோக்கத்திலேதான் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்கின்ற கருத்தும் எமது மக்களிடம் காணப்படுகின்றது.

இவ்வாறு ஏற்கனவே இல்மனைட் அகழ்வு மேற்கொள்ளப்பட்டதன்மூலம் கொக்கிளாயில் மிகமோசமாகப் பாதிக்கப்படுள்ள பொதுமக்களின் காணிகள் சீர்செய்து கொடுக்கப்படுவதுடன், பாதிப்புகளுக்கான நிவாரணங்களும் வழங்கப்படவேண்டும்.

இனி எவரும் இல்மனைட் அகழ்விற்கென முல்லைத்தீவிற்கு வருகைதரக் கூடாது. அதற்கு அனுமதிகளும் வழங்கப்படக்கூடாது. அதனை மீறிச் செயற்பட்டால் எமது மக்களின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருக்கும் – என்றார்.

இந்நிலையில் இல்மனைட் அகழ்விற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்ற தீர்மானம் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் எடுக்கப்பட்டதுடன், ஏற்கனவே இல்மனைட் அகழ்வின்மூலம் பகுதியை குறித்த "மிட்வெஸ்ட் ஹெவி சான்ட்ஸ் பிறைவேட் லிமிட்டெட்" நிறுவனம் சீர்செய்யவேண்டுமென ஆளுநர் வேதநாயகன் அவர்களாலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டதுடன், தீர்மானமும் எடுக்கப்பட்டது.

# உள்ளூராட்சி மன்றங்களால் அறவிடப்படும் வரிப்பணம் நிரந்தர வைப்புக்கானது அல்ல!

## மீள மக்கள் நலத் திட்டங்களுக்காக செல்ல வேண்டும் என்கிறார் ஜெகதீஸ்வரன் எம்.பி.

(கி.வசந்தன்)

உள்ளூராட்சி மன்றங்களால் அறவிடப்படும் வரிப்பணம் நிரந்தர வைப்புக்கானது அல்ல. அது மீள மக்கள் நலத் திட்டங்களுக்காக சென்றடைய வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இலங்கை முழுவதும் நடைபெற இருக்கின்றது. இதில் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்துடன் மன்றங்களை கைப்பற்றும் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கிறது. பொதுமக்கள், புத்திஜீவிகள் ஆகியோருடன் கலந்துரையாடும் போது அவர்களது கருத்துக்களை பெற முடிகிறது. குறிப்பாக வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றும் என்ற எண்ணம் எங்களிடத்தில் உள்ளது.



வன்னி மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும். மக்களும் அதற்கான ஆதரவை எங்களுக்கு வழங்குவார்கள் என நம்புகின்றோம். கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றிய கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களை எவ்வாறு நடத்திச் சென்றார்கள் என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

வவுனியா மாநகர சபையை கைபற்றியவர்கள் பல உட்கட்டமைப்பு வசதிகள், மக்கள் நலன்னோம்பு திட்டங்களை செய்ய வேண்டிய தேவைகள் காணப்பட்ட போதிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் கஷ்டப்பட்டு செலுத்தும் வரியை நிரநதர சேமிப்பில் வைத்து வர்த்தக வங்கிளின் போலான செயற்பாட்டை செய்து வந்தது ஒரு வேதனைக் குரிய விடயமாகும். அது பிழையான செயற்பாடு.

மக்களிடம் வரிப்பணமாக அறவிடப்படும் பணம் மீண்டும் மக்களுக்கே சென்றடைய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளைத் திருத்தி மக்களது வரி, மக்களது வாடகை, பெறப்படுகின்ற முற்பணம் அது மக்களுக்கே மீளச் சென்று அவர்களது நலத் திட்டங்களை செயற்படுத்தும் வகையில் நாம் அவற்றைச் செயற்படுத்துவோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக அறிய முடிகிறது. அது குறித்து நடவடிக்கை எடுப்போம். தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு நாடாளுமன்ற தேர்தலை விட அதிகரித்துள்ளது. அடுத்து வரும் 5 வருடங்களில் மக்களாட்சி இடம்பெறும். ஊழல் ஒழிக்கப்படும். ஊழல்கள், மோசடிகள் விசாரிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்படும். இதனை எதிர்காலத்தில மக்கள் காணக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.



# தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எம்.பிக்கள் மீது பொதுமக்கள் பாய்ச்சல், விசனம்!





(பிரபாகரன் டிலக்சன்)

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் அர்ச்சுனா எம்.பிக்கும் இளங்குமரன் எம்.பிக்குமிடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டமையால் கூட்டத்தில் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளாகப் பங்கேற்ற பொதுமக்கள் ஆத்திரமடைந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாநாதன் இளங்குமரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான இராமநாதன் அருச்சுனா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், தென்மராட்சி பிரதேச செயலாளர், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வீதி அபிவிருத்தி, சுகாதாரம், விவசாயம், மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

விடயங்கள் தொடர்பில் ஆராயும் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அருச்சுனாவுக்கும் இளங்குமரனுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

“ஐந்தாயிரத்திற்கு 3 பூச்சியங்கள்” எனத் தேவையற்ற கதையை அருச்சுனா முன்வைக்க இளங்குமரனும் அருச்சுனாவுக்கு பதில் வழங்கிக் கொண்டிருந்தார்.

இதன்போது குறிக்கிட்ட பொதுமக்கள் “நாங்கள் வேலை வெட்டி இல்லாமல் இவ்விடத்திற்கு வரவில்லை. எங்களுடைய நேரத்தினை வீண்விரயம் செய்யாது பிரயோசனமாக இந்தக் கூட்டத்தினை நடத்துங்கள்” என தமது கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் காட்டமாக முன்வைத்தனர்.

கடந்த நல்லூர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் அரசியல் நையாண்டிகள் அதிகரித்த நிலையில் பொதுமக்கள் தங்கள் எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர். அது போல் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் முரண்பட்டுக்கொண்டமை மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கள்ள காதலியின் படத்தை முகநூலில் தரவேற்றிய கான்ஸ்டபிள் சேவையிலிருந்தும் இடைநிறுத்தம்!

(கனகராசா சரவணன்)

பொத்துவில் பிரதேசத்தில் பெண் ஒருவருடன் திருமணம் கடந்த உறவில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்களை முகநூலில் தரவேற்றம் செய்த சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவில் கடமையாற்றி வரும் மட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பணியில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் திருமணம் முடித்த பெண் ஒருவருடன், வேறு திருமணம் முடித்துள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் திருமணம் கடந்த உறவில் ஈடுபட்டபோது அதனைப் படம் எடுத்து வைத்திருக்கின்றார். பின்னர் அதனை முகநூலில் பிரசுரித்த சம்பவம் தொடர்பாக கடந்த செவ்வாய்கிழமை பொத்துவில் பொலிஸாரால் மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றி வந்த அந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரை பொத்துவில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்தி அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தவிட்டார்.

இந்த சம்பவத்தையடுத்து சம்பந்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளைப் பணியில் இருந்து இடை நிறுத்தியுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஜனவரி தொடக்கம் இன்றுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒழுக்கம் மீறி நடந்துகொண்ட 3 பொலிசார் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# திருகோணமலை மாவட்டத்தில் வருடாந்தப் புத்தரிசி பெருவிழா

(ஏ.எச்.ஹஸ்பர், எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் பெரும்போக அறுவடைக்கான 58 ஆவது வருட புத்தரசி விழா நேற்று உப்புவெளி கமநல சேவைகள் உத்தியோகத்தர் து. தர்சானந்தனின் ஏற்பாட்டில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட உதவி ஆணையாளர் என். விஷ்ணுதாசன் தலைமையில் உப்புவெளி கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக ஓய்வு நிலை இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரும் கமநல நியாயசபை நீதிபதியுமான கே.பி.ஹெட்டியாராச்சி மற்றும் சிறப்பு விருந்தினராக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் திருமதி த.வருணியும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இதன் போது, திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் அறுவடையை கௌரவிக்கும் முகமாக சட்டிகளில் அரிசி வைக்கப்பட்டு, அவை தேசிய மட்ட புத்தரிசி விழாவுக்கு கொண்டு செல்வதற்கான பிரதான பாத்திரத்தில் இடப்பட்டது.

புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் நான்காம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான விழா பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வமத தலைவர்களின் பங்குபற்றலுடன் இவ்விழாவானது மிகவும் கோலாகலமாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்குப் பரிசில்களும், அதிகாரிகளுக்கு நினைவுச் சின்னங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இவ்விழாவில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், கமக்கார அமைப்புக்களின் தலைவர்கள், நீர்ப் பாசன திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர், கமநல காப்புறுதி சபை உத்தியோகத்தர், 22 கமநல சேவைகள் நிலையங்களினதும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.











# சனிப்பெயர்ச்சி பலன்கள்

## மேஷம் முதல் மீனம் வரை!

## (2025 - 2027)

நளை (29.03.2025) சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு திருக்கணிதப் பஞ்சாங்கப்படி மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருட காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

- இராமகிருஷ்ண சோதிடர் -

### மேஷம்

இதுவரை உங்களது லாப ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி அயன சயன போக ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் ரண ருண ரோக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் பாக்கிய ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

இந்தச் சனிப்பெயர்ச்சியில் கடும் குழப்பத்துக்குப் பிறகு மனதில் தெளிவு பிறக்கும். திட்டமிடாமல் காரியங்களைச் செய்யும் போது அலைச்சல்கள் அதிகரிக்கும். மனதை ஒருமுகப்படுத்தி உழைக்கத் தொடங்குவீர்கள். மற்றவர்களின் மனதைத் துல்லியமாக அறிந்துகொள்வீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு இந்தப் பெயர்ச்சியின் மூலம் பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் நிதானமாகவும், கோபப்படாமலும் நடந்துகொண்டால் நல்ல இலாபங்களை அள்ளலாம்.

அரசியல்வாதிகளுக்கு உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். அவற்றில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறுவீர்கள்.

பெண்மணிகளுக்குக் கணவரிடம் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். மாணவ மணிகள் கல்வியிலும், விளையாட்டிலும் வெற்றிக்கொடி நாட்டுவீர்கள்.

### ரிஷபம்

இதுவரை உங்களது தொழில் ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி லாப ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் ராசியையும், ஏழாம் பார்வையால் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

இந்த சனிப்பெயர்ச்சியில் பல சாதகமான நிலைமைகள் வர இருக்கிறது. உங்களின் வெளியூர் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துவார். நீங்கள் விரும்பிய வீட்டுக்குக் குடிபெயர்வீர்கள். சுகபோக வசதிகளை அனுபவிப்பீர்கள். உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உடல் உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும்.

தொழிலில் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கி முன்னேற்றகரமான திருப்பங்கள் உண்டாகும். கடன்களைத் திருப்பி அடைத்து புதிய சேமிப்புகளிலும் ஈடுபடுவீர்கள். வியாபாரிகளின் திட்டங்கள் அனைத்தும் நல்ல இலாபத்தைக் கொடுக்கும். கொடுக்கல், வாங்கலில் சிறப்புகள் உண்டாகும்.

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தொண்டர்களின் ஆதரவுடன் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். கலைத்துறையினர் கடினமாக உழைத்தால் துறையில் வெற்றி வாகை சூடலாம்.

பெண்மணிகள் இல்லத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். மாணவ மணிகள் கடினமாக உழைத்துப் படிப்பதன் மூலம் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள்.

### மிதுனம்

இதுவரை உங்களது பாக்கிய ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி தொழில் ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் அயன சயன போக ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் சுக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் களத்திர ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

இடம் பெயரும் கர்மகாரகன் சனியால் உங்களின் பொருளாதார நிலை மேம்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். பொதுநலக் காரியங்களில் ஆர்வம் அதிகரிக்கும். உங்கள் செயல்களை நேர்மையான பாதையில் செவ்வனே செய்து முடித்து அனைவரின் பாராட்டுகளையும் பெறுவீர்கள்.

உத்தியோகஸ்தர்கள் கடின உழைப்பைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றவும். உங்கள் உடல் உழைப்புக்கு மேல் இரண்டு மடங்கு வருமானத்தைக் காண்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரிகளுக்குச் சமுதாயத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும்.

அரசியல்வாதிகளுக்கு சங்கடங்கள் குறையத் தொடங்கும். தொண்டர்கள் உங்கள் பெருமைகளைப் புரிந்து கொள்வார்கள். கலைத்துறையினருக்கு திறமைக்கேற்ற புகழும், கௌரவமும் கட்டாயம் கிடைக்கும். பண வரவில் முன்னேற்றம் உண்டாகும்.

பெண்களுக்குக் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். மாணவ மணிகள் புத்திசாலித்தனமாகச் செயல்படுவீர்கள். நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கு வாய்ப்பு உண்டாகும்.

# சனிப்பெயர்ச்சி பலன்கள்

# மேஷம் முதல் மீனம் வரை!

## கடகம்

இதுவரை உங்களது அஷ்டம ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி பாக்கிய ஸ்தானத் துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் லாப ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் தைரிய வீரிய ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் ரண ருண ரோக ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

சனி பகவான் செழிப்போடு செல்வாக்கையும் உங்களுக்கு அள்ளித் தருவார். அனைத்துக் காரி யங்களிலும் சராசரிக்கும் கூடுதலான வெற்றிகளைக் காண்பீர்கள். உங்களை மூத்த சகோதர, சகோதரி களுடன் இணைந்து செயற்பட வைப்பார். ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்குவீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு சகஊழியர்கள் உங்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள். அலுவல கத்தில் இருந்து கடன் கிடைத்து வாகனம் வாங்கும் யோகமும் பலருக்கு அமையும். வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் எந்தக் குறை யும் ஏற்படாது.

அரசியல்வாதிகள் அனைவரையும் அரவணைத் துச் செல்வீர்கள். கட்சி மேலிடத்தின் கனிவான பார்வை உங்கள் மீது விழுந்து, உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். கலைத்துறையினருக்கு அனுகூலமான திருப்பங்கள் உண்டாகும். பாராட்டும், பணமும் உங்கள் உள்ளத்தை உற்சாகப்படுத்தும்.

பெண்மணிகள் இல்லத்தில் மகிழ்ச்சியைக் காண்பீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். மாணவ மணிகள் வீண்வாக்குவாதங் களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். நீங்கள் நீங்க ளாகவே இருக்கப் பழகி உங்களின் முன்னேற் றத்திற்கு அடி கோலுங்கள்.

## சிம்மம்

இதுவரை உங்களது களத்திர ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி அஷ்டம ஸ்தானத் துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் பஞ் சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

இதுவரை இருந்த கடினமான சூழ்நிலையில் இருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் உற்சாகம் கரை புரளும். புத்திரர்களாலும், பேரப்பிள்ளைகளாலும் மகிழ்ச்சி ஏற்படும். உயர்ந்த பதவிகள் உங்களைத் தேடி வரும். வம்பு, வழக்குகளில் இருந்தும் விடுபட்டு புதிய மனிதனாவீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு சனி கௌரவமான பதவிகளை வழங்குவார். உங்களின் கடமைகளைப் பதற்றப்படாமலும், நிதானத்துடனும் செய்தால் எந்தச் சரிவுக்கும் ஆளாகாமல் தப்பிக்கலாம். வியாபாரிகள் நல்ல பொருளாதார வளத்தைக் காண்பீர்கள். கொடுக் கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் மறையும். கூட்டாளி களிடம் ஒற்றுமை உண்டாகும்.

அரசியல்வாதிகள் உங்கள் செயல்களை நேர்த்தி யாகச் செய்வீர்கள். பண வரவும் நன்றாகவே இருக்கும். கலைத்துறையினர் சக கலைஞர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் சில முடிவுக்கு வரும்.

பெண்மணிகள் குழந்தைகளால் சந்தோஷம் அடைவீர்கள். உங்களின் புத்திசாலித்தனத்தைக் குடும்பத்தினர் புகழ்வார்கள். மாணவமணிகள் கல்வி யில் மிகுந்த ஈடுபாடு காட்டுவீர்கள். பெற்றோர்களின் ஆதரவும் தொடர்ந்து நல்லவிதமாக இருக்கும்.

## கன்னி

இதுவரை உங்களது ரண ருண ரோக ஸ்தானத் தில் இருக்கும் சனி பகவான் விலகிக் களத்திர ஸ்தா னத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் பாக்கிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் ராசியையும் பத்தாம் பார்வையால் சுகஸ்தானத்தை யும் பார்க்கிறார்.

உங்களுக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக் கும். வெளிநாடுகளுக்குச் சென்றுவரும் யோகம் உண்டாகும். தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். புதிய முதலீடுகளில் ஈடுபட்டு வருங்காலத்தை வளமாக் கிக் கொள்வீர்கள். தொழிலில் அதிக முதலீடுகளைச் செய்வீர்கள். இதனால் வருமானம் குவியும். உங்கள் புகழும், கௌரவமும் உயரும்.

உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள் பொறு மையுடன் செயல்பட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வருமானம் சிறப்பாகவே தொடரும்.

அரசியல்வாதிகளின் பெயரும், புகழும் வளரும். புதிய பதவிகள் உங்களைத் தேடிவரும். பெண்மணி களுக்குக் குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்களை அணுகிப் பயன் பெறுவார்கள். மாணவ மணிகளுக்கு நினைவாற்றல் பெருகும். இதனால் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள்.

## துலாம்

இதுவரை உங்களது பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி ரண ருண ரோக ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் அயன சயன போக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தைரிய வீரிய ஸ்தானத்தை யும் பார்க்கிறார்.

பலவிதமான குழப்பங்கள் இருந்தும் திட சிந்தனை களுடன் உங்கள் குறிக்கோள்களை அடைவீர்கள். வருமானத்தைப் பெருக்குவதற்கு நல்ல வழிகள் உதயமாகும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சூழ்நிலைக்கு ஏற்ப செயல்முறைகளை மாற்றிக் கொண்டு நன்மைகளைக் காண்பீர்கள்.

உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். உங்களின் தன்னம்பிக்கை உயரும். எதிர்பாராத பதவி உயர்வால் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போவீர்கள். வியாபாரிகளுக்கு கடும் முயற்சிகளுக்குப் பின் தகுந்த லாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் குறையும்.

அரசியல்வாதிகளுக்குப் பெயரும், புகழும் அதி கரிக்கும். கட்சி மேலிடத்தால் பாராட்டப்படுவீர்கள். தொண்டர்களின் ஆதரவு, உங்களை உற்சாகப்படுத் தும். கலைத்துறையினருக்கு பணவரவு சீராகவே தொட ரும். ரசிகர்களின் ஆதரவும் அமோகமாக இருக்கும்.

பெண்மணிகளுக்கு ஆன்மீகச் சுற்றுலாவும், இன்பச் சுற்றுலாவும் சென்று மகிழ்ச்சி அடைவீர் கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறையும். பிள்ளைகளா லும் சந்தோஷம் உண்டாகும். மாணவ மணிகள் உழைப்புக்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவீர்கள். கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் சாதனை புரிவார்கள்.

# சனிப்பெயர்ச்சி பலன்கள்

## மேஷம் முதல் மீனம் வரை!

### விருச்சிகம்

இதுவரை உங்களது சுக ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் களத்திர ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் லாப ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

துர்க்கை அன்னையை தொடர்ந்து வழிபட்டால், எதிரிகள் உதிரிகளாகித் தொலைந்து போவார்கள். தர்ம காரியங்களைச் செய்வீர்கள். தடங்கல்களைத் தாண்டி வெற்றியடைவதில் ஐயமேயில்லை. உங்களின் தனித்தன்மையை இழக்க மாட்டீர்கள். அரச தொடர்புகள் உங்களுக்குச் சாதகமாகவே அமையும்.

குடும்பத்திலும், உற்றார் உறவினர்களிடமும் உங்கள் செல்வாக்கு உயரும். உங்கள் செயல்களைப் புதிய உத்வேகத்துடன் செய்து முடிக்க வழிபிறக்கும். உத்தியோகஸ்தர்கள் பயணங்களால் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். சிலர், விரும்பிய வெளியூருக்கு மாற்றலாகிச் செல்வார்கள்.

வியாபாரிகளுக்கு தொழிலில் இருந்த போட்டிகள் குறையும். லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் பணியாற்றும் திறன் அதிகரிக்கும். கட்சி மேலிடத்தால் உற்சாகப்படுத்தப்படுவீர்கள். கலைத்துறையினர் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உங்கள் பெயரும், புகழும் உயரும்.

பெண்மணிகள் கணவரின் பாராட்டுகளை எளிதில் அடைவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். மாணவ மணிகள் நல்ல மதிப்பெண்களை வாங்க வழிவகையுண்டு. பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும்.

### தனுசு

இதுவரை உங்களது லாப ஸ்தானத்தில் இருந்த சனி பகவான் இனி உங்களது அயன சயன போக ஸ்தானத்துக்கு மாறுகிறார். அவர் தனது ஏழாம் பார்வையாக உங்களது ரண ருண ரோக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையாக உங்களது பாக்கிய ஸ்தானத்தையும், தனது மூன்றாம் பார்வையாக உங்களது தன வாக்கு குடும்ப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

எதிலும் நிதானமாகவும், அளவெடுத்துச் சிறப்பாகவும் செயற்பட வைப்பார். இதனால் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பேசி, காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். இல்லத்தில் திருமணம், குழந்தைப் பிறப்பு போன்ற சுப காரியங்கள் நடக்கும். உங்களின் சுய முயற்சியின் அடிப்படையில் செயற்கரிய காரியங்களைச் செய்வீர்கள். உங்களால் சகோதர, சகோதரிகளுக்கும் நன்மை உண்டாகும்.

குடும்பத்தில் அமைதி நிலவும். செல்வத்தோடு செல்வாக்கும் உயரும். எதிர்பாராத இடங்களிலிருந்து தக்க உதவிகளைப் பெறுவீர்கள்.

உத்தியோகஸ்தர்கள், அனைத்து வேலைகளையும் குறித்த காலத்துக்குள் முடித்து, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். பதவி உயர்வு பெறுவதற்கு உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்வீர்கள்.

அரசியல்வாதிகளைத் தேடிப் புதிய பதவிகள் வரும். தொண்டர்களை அரவணைத்துச் சென்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். மறைமுக எதிர்ப்புகள் அகலும். கலைத்துறையினர் சககலைஞர்களின் உதவியால் உங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

### மகரம்

இதுவரை உங்களது தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி தைரிய வீரிய ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் பாக்கிய ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் அயன சயன போக ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

தாயின் வழியில் நன்மைகள் உண்டாகும். உங்களை விட்டு விலகியிருந்த தாய் வழி உறவினர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். எப்போதோ உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் காலகட்டம் இது. உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும்.

அனைத்து விஷயங்களையும் நல்ல கண்ணோட்டத்துடன் காண்பீர்கள். தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். எதிர்பாராத இடங்களில் இருந்து பணவரவு உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய பணி உயர்வு கிடைக்கும். இதனால் ஊதியம் உயரும்.

அரசியல்வாதிகள், கட்சியின் மேலிடத்தில், கணிசமான ஆதரவைப் பெறுவீர்கள். சமுதாயத்துக்குப் பயன்படும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். கலைத்துறையினருக்கு அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும். உங்களைத் தேடிப் புதிய வாய்ப்புகள் வரும்.

பெண்மணிகள், குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும்.

### கும்பம்

இதுவரை உங்களது ராசியில் இருக்கும் சனி பகவான் விலகி தன வாக்கு குடும்ப ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் சுக ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் லாப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

உங்கள் சகோதர, சகோதரிகளிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை வளரும். அவர்களுடன் சேர்ந்து இனிய பயணங்களைச் செய்வீர்கள். உங்களின் ஆற்றல் அதிகரிக்கும். நேர்மையான எண்ணங்களால் உங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். சமூகத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை உயரும். வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்ப்புக் கிடைக்கும்.

உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகப் பணிகள் சிறப்பாக முடியும். எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பெறுவீர்கள். வியாபாரிகள் வியாபாரத்தை சீரமைப்பதற்கு நீங்கள் சுயமாக மேற்கொள்ளும் முயற்சிகள் நிச்சயம் வெற்றியடையும்.

அரசியல்வாதிகள், மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள். கடினமான வேலைகளையும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். உங்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதையில் செல்லும்.

பெண்மணிகள், மனநிம்மதியைக் காண்பீர்கள். தர்ம காரியங்களிலும், தெய்வ வழிபாட்டிலும் ஈடுபடுவீர்கள். மாணவ மணிகள் உற்சாகமான மன நிலையுடன் கல்வியில் ஈடுபடுவீர்கள். உடல் வலிமை பெறத்தக்க பயிற்சிகளில் ஈடுபடவும்.

# சனிப்பெயர்ச்சி பலன்கள்
## மேஷம் முதல் மீனம் வரை!

### மீனம்

இதுவரை உங்களது அயன சயன போக ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி ராசிக்கு வருகிறார். மூன்றாம் பார்வையால் தைரிய வீரிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் களத்திர ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சரளமான பண வரவால் சந்தோஷம் அடைவீர்கள். நம்பிக்கையுடன் உங்கள் பணிகளில் ஈடுபடுவீர்கள். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர, சகோதரிகள் மற்றும் நண்பர்கள் மூலமாக நன்மை அடைவீர்கள். புதிய சொத்துக்களை வாங்குவீர்கள்.

சேமிப்பு விஷயங்களில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். அலைச்சல்களுடன் நடந்த செயல்கள் நல்லபடியாக முடிவடையும். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கை வந்து சேரும்.

உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு தேடி வரும். வருமானம் சீராக இருக்கும். விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். வியாபாரிகள் உங்களின் சமயோஜித புத்தியால் பிரச்சினைகளில் இருந்து தப்பித்துக் கொள்வீர்கள். புதிய வாடிக்கையாளர்களையும், புதிய சந்தைகளையும் நாடிச் செல்வீர்கள்.

அரசியல்வாதிகள், தாங்கள் சார்ந்துள்ள கட்சியின் தொண்டர்களுக்கும், நெருங்கியவர்களுக்கும் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

பெண்மணிகளுக்குக் குடும்பத்தில் அமைதி நிலவும். வெளியூர் மற்றும் வெளிநாட்டிலிருந்து இன்பகரமான செய்திகள் வந்து சேரும். மாணவமணிகள் படிப்பில் வெற்றி வாகை சூடுவீர்கள். மேலும் உங்கள் ஞாபக சக்தியும், அறிவாற்றலும் பெருகும்.

# புகையிலைக்கு நடுவே சூட்சுமமாக கஞ்சா செடி வளர்த்தவர் சிக்கினார்

யாழ்ப்பாணத்தில் கஞ்சா செடி வளர்த்த குற்றச்சாட்டில் நேற்று வியாழக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலையே புன்னாலைக்கட்டுவான் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் புகையிலை தோட்டத்தில், புகையிலைக் கன்றுகளுக்கு மத்தியில் மிக சூட்சுமமான முறையில் கஞ்சா செடி வளர்த்து வருகின்றார் என இரகசியத் தகவல் கிடைத்ததை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கஞ்சா செடியை மீட்டதுடன், அதனைப் பயிரிட்ட குற்றச்சாட்டில், 42 வயதுடையவரைக் கைது செய்தனர்.

மீட்கப்பட்ட கஞ்சா செடி சுமார் 4அடி உயரம் எனக் கூறப்பட்டது. மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கைது செய்யப்பட்டவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸார் சந்தேக நபரை தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# தென்மராட்சியில் 42ஆயிரம் குரங்குகள்

(பிரபாகரன் டிலக்சன்)

தென்மராட்சி பிரதேசத்தில் 42ஆயிரம் குரங்குகள் இருக்கின்றன என அண்மைய அரசாங்கக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாக தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் விவசாயம் பற்றி கலந்துரையாடும் போது, அண்மையில் அரசாங்கம் முன்னெடுத்த கணக்கெடுப்பில் சாவகச்சேரி பகுதியில் எத்தனை குரங்குகள் உள்ளன எனக் கணக்கெடுக்கப்பட்டதா என அருச்சுனா இராமநாதன் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதேச செயலாளரால் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் குரங்குகளால் மக்களின் விவசாயப் பயிர்கள் அழிவடைகின்றன எனவும் அதனை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளாக வாயு துப்பாக்கிகளை பயன்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

# இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினை மரபுரீதியாக தொடர்கிறது

## நாடாளுமன்றத்தில் எஸ். ஜெய்சங்கர் தெரிவிப்பு



1974 ஆம் மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நிகழ்வுகளால் இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை மரபுரீதியாக தொடர்கிறது என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றில் நேற்று கேள்வி நேரத்தின் போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் நிலை குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டன. இதன்போதே இவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மீன்பிடி தொடர்பாக இலங்கையில் இரண்டு சட்டங்கள் உள்ளன. ஒன்று 1996 ஆம் ஆண்டின் மீன்வள மற்றும் நீரியல் வளச் சட்டம். மற்றையது 1979 ஆம் ஆண்டின் வெளிநாட்டு மீன்பிடி படகுகளின் மீன்வள ஒழுங்குமுறை சட்டம். இந்த இரண்டு சட்டங்களும் 2018 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டன. இதனால் மிகவும் கடுமையான தண்டனைகள், பாரிய அபராதங்கள் மற்றும் விளக்கமறியல் என்பன வழங்கப்படுகின்றன.

தண்டனை அனுபவிக்கும் பலர் படகு உரிமையாளர்கள், ஓட்டுநர்களாக இருப்பதுடன் மீண்டும் மீண்டும் அவர்கள் கைதாகி குற்றவாளிகளாக காணப்படுவதால், தீர்வு முயற்சிகள் சிக்கலாகின்றன. இலங்கையில் இந்திய மீனவர்களை தடுத்து வைப்பது தொடர்பான தற்போதைய பிரச்சினைக்கான மூல காரணம் 1974 ஆம் ஆண்டு சர்வதேச கடல் எல்லைக் கோடு வரையப்பட்டபோது ஆரம்பமாகியது.

அதைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டில் இலங்கை மீன்பிடி அதிகார வரம்பை வரையறுத்ததன் மூலம் இப்பிரச்சினை நீண்டுள்ளது. அதேநேரம் தற்போது, இலங்கையில் மொத்தம் 97 பேர் விளக்கமறியலில் உள்ளனர். அவர்களில் 83 பேர் தண்டனை அனுபவித்து வருவதுடன், மூன்று பேர் விசாரணைக்காக காத்திருக்கின்றனர்." – என்றார்.

# ஓ.பி.எஸ். உடன் இணைவது சாத்தியம் இல்லை; இ.பி.எஸ்.



தி.மு.கவை தவிர எந்த கட்சியும் எங்களுக்கு எதிரி இல்லை. ஒத்த கருத்துடைய கட்சிகளை கூட்டணியில் சேர்த்துக் கொள்வோம் என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கருப்பசாமி பாண்டியன் உடல்நலக் குறைவால் காலமானார். இவரின் உடல் நேற்று திருநெல்வேலியில் அடக்கம் செய்யப்பட்டது. ஆகவே, கருப்பசாமி பாண்டியன் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வாகைக்குளம் விமான நிலையம் சென்றார்.

பின்னர், கார் மூலம் திருநெல்வேலியில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று அஞ்சலி செலுத்தி விட்டு சென்னை செல்வதற்காக தூத்துக்குடி விமான நிலையம் வருகை தந்த அவர் அங்கு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்,

"உள்துறை அமைச்சரை சந்தித்து தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிலுவைத் தொகையை பல்வேறு திட்டத்திற்கு விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்திருக்கின்றேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் மத்திய அரசிடம் இருந்து மாநில அரசுக்கு வரவேண்டிய நீதி தாமதமாகி உள்ளது. அது தொடர்பாகவும் கோரிக்கை மனு அளித்துள்ளோம். அண்ணா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் இரு மொழிக் கொள்கையே தொடர வேண்டும் என்பதுதான் நிலைப்பாடு. அதனை வலியுறுத்தியும் மனு கொடுத்துள்ளோம்.

ஓ.பி.எஸ். நானும் பிரிந்தது, பிரிந்தது தான். இனி சேர்வதற்கு சாத்தியம் கிடையாது. கட்சியை எப்போது எதிரிகளிடம், அடமானம் வைத்தாரோ, கட்சியின் தலைமை கழகத்தை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோவிலை என்று அவர் உடைத்தாரோ, அவருக்கு இந்த கட்சியில் இருப்பதற்கு தகுதி இல்லை. இலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் நிவாரணம் அனைத்தும் அளித்தோம். ஆனால் இந்த ஆட்சியில் அவ்வாறு இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தை தவிர எந்த கட்சியும் எங்களுக்கு எதிரி அல்ல., ஒத்த கருத்துள்ள கட்சிகளை நாங்கள் சேர்த்து கொள்வோம். தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும்

மோசமான ஆட்சி போதை பொருள் நடமாட்டத்துக்கு அளவே இல்லை. பொலிஸ்/க்கு அவர்கள் அச்சப்படவில்லை. சர்வ சாதாரணமாக கொலை சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொலிஸ் ஏவல் துறையாக மாறிவிட்டது." என்றார்.



# தென்கொரிய காட்டுத்தீ; 27 பேர் உயிரிழப்பு

தென்கொரியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் இதுவரை 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

86,500 ஏக்கர் நிலம் தீக்கரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

200 இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் தீயில் எரிந்து சேதமடைந்து உள்ளன.

தென் கொரியாவின் தென்கிழக்கு நகரமான, உய்சோங்கில் ஏற்பட்ட காட்டுத்தீயானது பலத்த காற்று மற்றும் வறண்ட வானிலை காரணமாகக் கட்டுப்பாட்டை மீறி வேகமாகப் பரவுவதாகத் தென் கொரிய அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காசா மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல் ஹமாஸின் பேச்சாளர் உட்பட 9 பேர் பலி

இஸ்ரேலிய படைகள் காசா மீது நேற்று நடத்திய தாக்குதலில் ஹமாஸின் பேச்சாளர் ஒருவர் உட்பட 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா மீதான இஸ்ரேலிய தாக்குதலில் கடந்த வாரத்தில் மாத்திரம் சுமார் ஒரு லட்சத்து 42 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் காசாவிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



இதேவேளை, இஸ்ரேல் தொடர்ந்தும் சிரியா மீது தாக்குதல் நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, துறைமுக நகரமான லடாகியாவை அண்டிய பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளாடிமிர் புடின் விரைவில் இறந்து விடுவார்; ஜெலன்ஸ்கி

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் விரைவில் இறந்துவிடுவார் என உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியொன்றின் போதே உக்ரைன் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

கீவ் படைகள் ரஷ்யாவின் பல பகுதிகளைத் தொடர்ந்து கைப்பற்றி வருகின்றன.

ரஷ்ய ஜனாதிபதியின் உடல்நிலையைக் குறித்து உக்ரைன் ஜனாதிபதி கடுமையாக விமர்சித்ததுடன், புடினின்



உடல் நிலை நீண்ட நாள்களாக மோசமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் புடின் இரண்டு வாரங்களுக்கு பொது இடங்களில் தோன்றவில்லை, இதனால் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட காணொலிகளை வெளியிட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதேவேளை, அவரின் உடல்நிலை மோசமான நிலைக்குச் சென்றிருக்கலாம் என்ற செய்திகளும் வலுப்பெற்றுள்ளன.

2014, 2020, மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பலமுறை அவருக்குப் புற்றுநோய் இருப்பதாகக் கூறப்பட்டது.

அவசர மருத்துவ உதவிக்காக அவருடன் எப்போதும் மருத்துவர்கள் குழுவொன்று பயணிக்கிறார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் விரைவில் இறந்து விடுவார் என உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச ஊடகங்களுக்குத் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.03.2025

## மேஷம்

இன்று சவால்களை உற்சாகமாக கையாள வேண்டும். உங்கள் பொறுமையை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும். மனக் குழப்பம் காரணமாக சரியான முடிவெடுக்க இயலாத நிலை இருக்கும்.

பணியிடத்தில் திறமையாக செயல்பட முடியாது. இன்று பணியில் வளர்ச்சி காண கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்பட நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்தப் போக்கை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

நிதிநிலைமையில் வளர்ச்சி காணப்படாது. நிதியில் ஸ்திரத்தன்மையும் காணப்படாது.

இன்று பாதுகாப்பின்மை உணர்வும் பதற்றமும் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

## ரிஷபம்

இன்று சற்று சுமாரன நாளாக இருக்கும். இன்று நற்பயன் காண பல விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவது இன்று சற்று கடினம்.

பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் முறையாக திட்டமிட வேண்டும். உங்கள் பணிகளை விவேகத்துடன் கையாள வேண்டும்.

உங்களிடம் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் தேவையற்ற விவாதங்கள் ஏற்பட வாயுப்புள்ளது. பொறுமையை வளர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை திருப்திகமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.

## மிதுனம்

இன்று நன்மை விளையும் நாள். அதிர்ஷ்டகரமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எதிர்பாரத பணவரவு காணப்படும்.

உங்கள் பணிகளை முடிப்பதில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். பிறரின் நன்மதிப்பை பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இதனால் உறவில் திருப்தி காணப்படும்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு பணம் சார்ந்த உதவி புரிவார்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது நல்லது.

## கடகம்

இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். இன்று புதிய நண்பர்கள் மற்றும் புதிய தொடர்புகளைப் பெறுவீர்கள். உங்கள் போக்கில் உற்சாகமான அணுகுமுறை காணப்படும்.

உங்கள் பணியில் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணியை திறமையைப் பயன்படுத்தி நல்ல தரத்துடன் முடித்துக் கொடுப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இந்த அணுகுமுறை உங்கள் துணையை திருப்திப்படுத்தும்.

இன்று போதிய பண வரவு காணப்படும். உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்திற்கு தேவையான தைரியம் மற்றும் ஆற்றல் உங்களிடம் காணப்படும்.

## சிம்மம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

உங்கள் பணியை திறம்பட ஆற்ற நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். நீங்கள் விரும்பிய பலனை அடைய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அதிருப்தி மற்றும் அசௌகரியம் உணர்வீர்கள். உங்களின் வேறுபாடான அணுகுமுறை உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. நீங்கள் பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## கன்னி

இன்று நீங்கள் விரும்பிய பலனை அடைய பொறுமை அவசியம். சில விஷயங்களில் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். நற்பலன்களைக் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்களின் ஏமாற்ற உணர்வு காரணமாக முரண்பாடு காணப்படும். உங்கள் துணையிடம் இதனை வெளிப்படுத்தாமல் கவனமாக இருங்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் செலவுகள் இன்று உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணத்தை சாதுர்யமாக செலவிட வேண்டும்.

## துலாம்

இன்று சமூகமான பலன்கள் கிடைக்கும் நாள். என்றாலும் உறுதியான முயற்சி மேற்கொள்ள வேண்டும். வெற்றி உங்களை நாடி வரும்.

உங்களின் அபாரமான செயல் திறமைக்கு நீங்கள் பாராட்டைப் பெறலாம். உங்கள் தனித்த திறமைகள் உங்களை சிறப்பாக செயல்பட வைக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் நடந்து கொள்வீர்கள்.இதனால் உறவில் பரஸ்பரம் அன்பு மலரும்.

நிதி நிலைமை ஸ்திரமாக சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று சிறப்பான ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்கள் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று சாதகமான நாளாக இருக்காது. இன்று நற்பலன்களைக் காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழப்பீர்கள். அமைதியாகவும் ஓய்வாகவும் இருப்பது சிறந்தது.

குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். ஆரோக்கியமான உறவை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று பணவரவிற்கான சாத்தியமான நாள் அல்ல. நீங்கள் தேவையின்றி சில விஷயங்களுக்காக பணத்தை செலவு செய்ய நேரும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.03.2025




இன்று துடிப்பான நாளாக இருக்காது. மனக் குழப்பங்கள் காணப்படும். பிரார்தனை மற்றும் இசை போன்ற நிகழ்ச்சிகள் மன ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். முறையாக திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் நன்மை விளையும்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. இது உறவின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இதனால் உங்களுக்குக் கவலை ஏற்படும்.

இனிப்பு உணவு வகைகளை தவிர்க்கவும். இதனால் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கான ஆற்றலும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். அனைத்து விதத்திலும் செழுமை காணப்படும்.

புதிய வாய்ப்புகள் கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது. இதன் காரணமாக திருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை விரும்பி அனுபவிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்வான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் யதார்த்தமாகவும் முறையாகவும் இருக்க வேண்டும். உங்கள் செயல்களை கையாள்வதில் சில தடைகள் காணப்படும். இன்றைய நாள் சராசரி பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றி காண கடும் முயற்சி செய்ய வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். இதனை தவிர்க்க முயற்சி செய்யவும்.

நிதி வளர்ச்சி இன்று சாத்தியமில்லை. உங்கள் குடும்பத்துக்காகக் கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியப் பிரச்சினையை தவிர்க்க அதிக நீரைப் பருகவும்.




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று உங்களுக்குச் சாதகமான நாள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். நற்பலன்கள் கிட்டும். பணி குறித்து உங்கள் மனதில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி ஸ்திரமாக காணப்படும். எதிர்பாரத பண வரவு காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# 2026 இல் நான்தான் முதலமைச்சர் மார் தட்டுகிறார் அருச்சுனா எம்.பி.!

(பிரபாகரன் டிலக்சன்)

2026 இல் நான்தான் முதலமைச்சர் என்று மார் தட்டினார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அருச்சுனா இராமநாதன்.



சாவகச்சேரி வைத்தியசாலைக்கான லிப்ட் மற்றும் வைத்தியசாலைக்கான உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான நிதியினை எனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலோ அல்லது புலம்பெயர் தமிழர்களிடமிருந்தோ எட்டு மாதங்களுக்குள் பெற்று தருவேன். அவ்வாறு முடியாது எனில் அரசியலிருந்து விலகுவேன் எனவும் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்தார்.

சாவகச்சேரி ஒருங்கிணைப்பு கூட்டத்தில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கான அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் ஆராயும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி வைத்தியசாலை தற்போது அழகுபடுத்தப்பட்டு வருகின்றது. தற்போதைய வைத்திய அதிகாரி திறம்பட செயற்பட்டு வருகின்றார்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நான் நிதி ஒதுக்குவதற்காக முன்வைக்கப்பட்ட எனது முன்மொழிவுகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளை நிறைவு செய்வது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளேன்.

புலம்பெயர் தமிழர்கள் பலர் நிதியை அனுப்புவது தொடர்பில் என்னோடு கலந்துரையாடியிருக்கின்றனர்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கான லிப்ட் மற்றும் வைத்தியசாலைக்கான உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான நிதியச்சி எனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலோ அல்லது புலம்பெயர் தமிழர்களிடமிருந்தோ எட்டு மாதங்களுக்குள் பெற்றுத் தருவேன். அவ்வாறு முடியாது எனில் அரசியலிருந்து விலகுவேன் என அங்கு அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்தார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் "கூட்ட அறிக்கையை எழுதுகிறீர்கள்தானே" என அதிகாரிகள் பக்கம் கேட்டார்.

"நான் துணிந்து மீண்டும் சொல்கிறேன். வடிவாக கூட்ட அறிக்கையை எழுதுங்கள். 2026இல் நான் தான் முதலமைச்சர். எனவே நிதியினைப் பெற்றுத் தருவேன்" என அர்ச்சுனா தெரிவித்தார்.

முதலமைச்சராக வர வாழ்த்துக்கள் என இளங்குமரன் தெரிவித்தார்.

இதன்போது வைத்தியர்களுக்கான தங்குமிட வசதி போதுமானதாக இல்லை, புதிய விடுதிக்கான கட்டடம் தேவைப்படுகின்றது என சாவகச்சேரி வைத்தியசாலை பதில் வைத்திய அதிகாரி கோபாலமூர்த்தி ரஜீவ் தெரிவித்தார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுசெல்வார் என அர்ச்சுனா எம்.பி. தெரிவித்தார்.